[1979 பிப்ரவரி 14

பிரதம நிலவள வங்கிக் காரியதரிசிகள்

* வினா எண். 43— திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றும் காரியதரிசிகளை மாநில நிலவள வங்கியின் பணியாளர்களாக எடுத்துக் கொள்வதுகுறித்து செயற்குறிப்பு ஏதாவது ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் எவ்வளவு பேர்களை எடுத்துக்கொள்ள உத்தேசம் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) பிரதம நிலவள வங்கிகளில் உள்ள செயலர்களுக்கு மட்டும் பொதுப் பணி அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பணியமைப்புக்கு மாநில நிலவள வங்கியின் நிர்வாக இயக்குநர் பணியமைப்பு அதிகாரியாக இருப்பார்.

(ஆ) மாநிலத்திலுள்ள பிரதம நிலவள வங்கிகளிலுள்ள எல்லாச் செயலர்களும் இப்பணியமைப்பின் கீழ் வருவர். இத்திட்டத்தை உடனே அமுல் நடத்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

[முற்பகல் 9.10]

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றும் காரியதரிசிகளை மாநில நிலவள வங்கியின் பணியாளர்களாக எடுத்துக்கொள்ள அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றுகிறவர்களை மாநில நிலவள வங்கியின் பணியாளர்களாகச் சேர்த்தால் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படும் என்ற காரணத்தால் அப்படிச் சேர்க்கப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : பிரதம நிலவள வங்கிகளிலே வேலை செய்யும் ஊழியர்களுக்கு கடந்த 8, 10 ஆண்டுகளாக எந்த நிலையிலே ஸ்கேல் இருந்ததோ அதே நிலையிலே தான் இன்னும் இருக்கிறது. அதை மாற்றியமைத்து அபிவிருத்தி செய்யக்கூடிய வகையிலே இன்றைக்கு ஸ்பெஷல் ஆபீஸர்கள் ரெக்கமண்ட் செய்தும் கூட டி. ஆர். கள் அதை நிறுத்திவிட்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு புதிய ஸ்கேலில் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி பதில் சேகரித்துத் தரப்படும்.

திரு. க. சுப்பு : மாநில நிலவள வங்கிகளில், பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றியவர்களை நியமிப்பதால் அவர்களுக்கு புரமோஷன் பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் கல்வித் துறையில் ஏ விங், பி விங் என்று இரண்டு விங்குகள் இருந்ததை ஒன்றாக ஆக்கி இருக்கிறார்கள். அப்போதும் அவர்களுக்கு புரமோஷனல் ஆப்பர்சூனிட்டி பாதிக்கப்படும் என்று சொல்லியும்கூட அரசாங்கம் அவைகளை இணைத்து இருக்கிறார்கள். கல்வித் துறையிலே அப்படி இணைப்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும்போது இதிலே மாத்திரம் ஏன் கொள்கை மாறுபட்டு இருக்கிறது என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய மேலான யோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நிலவள வங்கிகளினுடைய செயலாளர்களாக சி. எஸ். ஆர்.-கள் தான் இருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்தச் சங்கங்களில் உள்ள செயலாளர்களை மாநில வங்கிகளில் அவர்கள் பணியாற்றச் செய்வதற்கு இல்லை என்று சொன்னார்கள். அவர்களை மாநில நிலவள வங்கி ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று கோரிக்கையை நீண்ட நாட்களாக வைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களை மாநில நிலவள வங்கிகளின் ஊழியர்களாக ஏற்றுக் கொண்டு பதவி உயர்வு போன்ற வாய்ப்புகளை அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிகளில் தொழில் நுட்பப் பதவிகளில் இருப்பவர்கள் அவர்களுடைய பதவி மூப்புக் காலம் பார்க்கப்படாமலேயே வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பிரதம நிலவள வங்கிகளின் கிளைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக தனித்தனி யூனிட்டுகளாக இருக்கின்றன. அவை அத்தனையையும் ஒன்றாக சேர்த்து மாநில நிலவள வங்கியின் கிளையாக ஆக்கிவிட்டால் இப்போது சில வங்கிகளில் கடன் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அந்த நிலைமையும் மாறிவிடும், அது மட்டுமல்ல இப்போது ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாதிரியாக ஊதியங்கள் இருக்கின்றன அவைகள் மாற்றப்பட்டு ஒரே விதமான ஊதியம் கிடைப்பதற்கும் அது வகைசெய்வதாக இருக்கும்—ஆகவே அந்தக் கிளைகளையெல்லாம் இணைக்கின்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை ஏற்றால் அவைகளின் தனித்தன்மை போய்விடும். என்றாலும்கூட அந்த யோசனை அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

சென்னை பராங்குசதாசர் கோவில்

* வினா எண். 44 திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவல்லிக்கேணி பராங்குசதாசர் கோவிலில் இராமானுஜர் சிலை திருட்டு நடந்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதைக் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருடப்பட்ட இராமனுஜர் சிலை காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எழும்பூர் சீப் மெட்ரோபாலிட்டன் நீதிபதியால் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தமிழகத்திலே கோயில் சிலைகள் அடிக்கடி களவாடப் படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது முக்கியமான சிலைகள் தமிழகத்திலே முக்கியமான பகுதிகள் இரண்டில் சேர்த்து அங்கேயே பாதுகாப்பாக வைக்கப்படுவதுபற்றி ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது.